**அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகம் - 2013**

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.
எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கிடைக்கவேண்டிய ரூபா 10,561 தொகையான வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யயப்பட்ட ரூபா 146,893 கிரயமான மூலதன உபகரணம் (Submerisible Aerated Pumb) நிலையான சொத்தின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக ஆராய்ச்சிச் செயற்திட்டத்தின் கீழ் செலவினமாகக் கருதி வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது நிறுவகத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த ரூபா 3,325,000 தொகையான 07 உபகரணங்கள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத 05 உபகரணங்கள் என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 259,880 தொகையான வருமானம் மற்றும் 04 செலவின விடயங்களின் பிழைகள் சரிசெய்யப்படாமல் மீளர்யவாண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(உ) முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட 08 விடயங்களுக்குரிய ரூபா 62,736,724 கிரயமான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நீண்டகாலமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் பங்களிப்புச் செய்யாத பலவருடங்களாக பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வழக்கிழந்த ஏட்டுப் பெறுமதி ரூபா 5,736,788 தொகையான அரிசியில் கறுப்பு விதைகளை அகற்றும் இயந்திரம், நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்குரிய அச்சொத்தின் பெறுமானத்தேய்வு ரூபா 430,259 தொகை வருமானச் செலவினைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டிற்கான சீராக்கம் ரூபா 195,560 கடந்த கால நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்குப் பதிலாக உரிமை மூலதனக் கூற்றில் திரண்ட இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஏ) வெளித்தரப்பினருக்கு விடுதிகளை வாடகைக்கு வழங்கியமை மற்றும் உணவு வழங்கியமைகளுக்காக கிடைக்கவேண்டிய ரூபா 588,825 இனை அறவிடுவதற்கு

நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அது கிடைக்க வேண்டிய பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இதற்காக செய்யப்பட்ட செலவினம் நிறுவகத்தின் செலவினமாகக் கருதப்பட்டிருந்தது.

**2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய உணவு மேம்படுத்தல் சபைக்கு 2012 ஆம் ஆண்டின் போது கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட ரூபா 74,500 பெறுமதியான 125 பிளாஸ்டிக் உறைகள் மற்றும் மஹஇலுப்பள்ளம விவசாயப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 19,000 பெறுமதியான 50 பிளாஸ்டிக் உறைகளுக்காக பணத்தை அறவிடுவதற்கோ அல்லது அந்த உறைகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2000 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான சொத்துக்களும் பொறுப்புக்களும், 2006 ஒக்தோபர் மாதத்தின் போது அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்திற்கு சட்டரீதியாகக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் நீண்ட காலமாகக் காணப்பட்ட ரூபா 6,133,917 தொகையான 14 வரவு மீதிகளையும் ரூபா 1,088,851 தொகையான 11 செலவு மீதிகளையும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாததும் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமின்றியும் நிறுவகத்தின் புலனாய்வு மற்றும் அவதானிப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது 08 சந்தர்ப்பங்களில் எரிபொருள் செலவினங்களுக்காக ரூபா 95,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த உத்தியோகத்தர் நிறுவகத்தின் அவதானிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமையை உறுதிப்படுத்தும் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | ரூபா 2,169,713 கூட்டுத்தொகையான 08 வைப்பு மீதிகள் 02 வருடங்கள் முதல் 19 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய பீஈடீ 58(2) ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மாதாந்த ஊதியம் ரூபா 50,000 இனை விஞ்சிய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக ரூபா 18,000 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடல் முறையான அங்கீகாரமின்றி கைவிடப்பட்டிருந்தது. |

**2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாதாந்த எரிபொருள் படி உரித்துடைய பெண் உத்தியோகத்தர் ஒருவரால் மாதமொன்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட 170 லீற்றர் எரிபொருள் படி மீயாய்வாண்டிற்கான எரிபொருள் 2040 லீற்றர்களுக்கு ரூபா 328,270 படிப்பணம் வழங்கப்பட்டிருந்தது. இந்தப் படிகளுக்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது ரூபா 109,386 தொகையான மேலதிக எரிபொருள் 767.5 லீற்றர் தனது உத்தியோகபூர்வ வாகனத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக 2008 யூன் 28 ஆந் திகதிய பீஈடீ/50 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் படி நிறுவகத்தின் தலைவரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தை உருவாக்குவதற்குரிய வர்த்தமானியில் காணப்படுகின்ற நோக்கங்களுக்கு முரணாகவும் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமின்றியும் நிறுவகத்தின் செயற்பாடுகளுக்குரித்தற்ற செலவினங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 47,623 செலவிடப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 16,567,327 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,893,838 ஆக இருந்தது. அதன்படி மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 11,673,489 இனால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய வருமானம் ரூபா 10,360,667 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 ஆராய்ச்சி செயற்திட்ட செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட அறுவடைசெய்த மரக்கறிகள் மற்றும் பழங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்களைக் குறைப்பதற்கான விஷேட செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2.5 மில்லியன் பெறுமதியான குளிரூட்டியைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,179,938 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் செய்திப்பத்திரிகை அறிவித்தல்களில் பிரசுரித்தல், துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு பகிர்ந்தளித்தல், ஆராய்ச்சி விவாதங்களை நடாத்துவதன் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய ஆராய்ச்சிகளின் பெறபேறுகள் அறுவடைக்குப் பிந்திய செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தின் ஆரம்பம் முதல் பல்வேறு ஆராய்ச்சி செயற்திட்டங்களின் கீழ் வடிவமைக்கப்பட்ட இயந்திரங்களின் பெறுமதிகளுக்காக பொருத்தமான முறைமையின் மூலம் கிரயம் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்காக கணக்கீட்டுக் கொள்கை மற்றும் இருப்புப் பதிவேடுகளில் பதிவதற்காக பேடன்ட் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டு வடிவமைப்பு உரிமையை பாதுகாப்பதற்கும்

இயந்திரத்தின் இருப்பை இனங்கண்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவகத்தில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களில் நலனாளிகள் உரிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது தொடர்பாக போதியளவான தரவு முறைமை நிறுவகத்தால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 இனங்காணப்பட்ட நட்டம்**

நிறுவகத்திற்குரிய பிரதேச நிலையங்களிலும் நூடில்ஸ் களஞ்சியத்திலும் காணப்பட்ட ரூபா 1,190,814 பெறுமதியான 1,993 பிளாஸ்டிக் உறைகள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 257,708 தொகையான இருப்புக்கள் என்பவற்றின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

**4.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மரக்கறி மற்றும் பழங்களைக் கொண்டு செல்லும் போது ஏற்படுகின்ற அறுவடைக்குப் பின்னரான பாதிப்பைக் குறைப்பதற்காக பிளாஸ்டிக் உறைகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 09 வருடங்களுக்கு முன் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,754,700 பெறுமதியான 5,849 உறைகள் மற்றும் 2012 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நலனாளிகளுக்காக 50 சதவீத நலனாளிகளின் பங்களிப்பின் அடிப்படையில் உபகரணங்களைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 350,000 பெறுமதியான 04 நடமாடும் வியாபாரக் கொட்டகைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பகிர்ந்தளிக்கப்படாமல் எஞ்சியிருந்தது.

(ஆ) மரக்கறி மற்றும் பழங்களைக் கொண்டு செல்லும் போது ஏற்படுகின்ற பாதிப்பைக் குறைப்பதற்காக பிளாஸ்டின் உறைகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிளாஸ்டிக் உறைகளின் விற்பனையில் கிடைத்த ரூபா 9,201,546 தொகையான வருமானம் அந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்று கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

**4.4 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவகத்தின் வளங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவிற்கு முரணாக நிறுவகத்தின் மூன்று ஊழியர்கள் 2010 ஆம் ஆண்டின் போது கமநல அமைச்சின் அமைச்சரின் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 990,627 தொகையும் முன்னைய ஆண்டிற்காக ரூபா 1,654,388 தொகையும் நிறுவகத்தால் சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2007 சனவரி 24 ஆந் திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி பொது முயற்சிகளுக்குரிய வளங்கள் உரிய அமைச்சுக்களின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக நிறுவகத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்று 2011 ஆம் ஆண்டின் போது கமநல அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அந்த வாகனத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 140,181 தொகையும், முன்னைய ஆண்டிற்காக ரூபா 143,256 கூட்டுத்தொகையும் நிறுவகத்தால் செலவிடப்பட்டிருந்தது.

**4.5 பதவியணியினர் நிருவாகம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 153 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 111 ஆனமையால் அத்திகதியில் உள்ளவாறு 42 வெற்றிடங்கள் காணப்பட்டன.

**4.6 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ரூபா 932,457 பெறுமதியான 06 வாகனங்கள் 03 வருடங்கள் முதல் 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் அந்த வாகனங்களை அகற்றுவதற்காக பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கொள்வனவுத் திட்டம்**

2013 ஆம் ஆண்டிற்குரிய கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 526,533 தொகையான பொருட்கள் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடு செய்யப்பட்டதற்கும் உள்ளபடியான பெறுமதிக்குமிடையே முரண்களை ஒப்பிட்டபோது 16 செலவின விடயங்களில் 43 சதவீதத்தை விஞ்சியும், 9 செலவின விடயங்களில் 82 சதவீத சேமிப்பும் ஏற்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் நிறுவகத் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டிருந்தது. கீழே காட்டப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமானக் கட்டுப்பாடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வாகனக் கட்டுப்பாடு

(ஈ) பதவியணியினர் முகமைத்துவம்

(உ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்